ஆதாரம் இல்லை என்பதைத்தான் காரணம் காட்டினேன். ஆனால், அதற்காகப் போடாமலும் இல்லை. ஆண்டுதோறும் கூடுதலான பதவிகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆசிரியர்கள் வேலை செய்கிற ஆரம்பப் பள்ளிகளில், 5 வயதிலுள்ள குழந்தைகள் படிப்பதினால், ஆசிரியர்களுடைய வேலைப் பளு மேல் மட்டத்திலேயிருக்கிற வேலைப் பளுவை விடக் கடினம் அவர்கள் விடுப்பில் இருக்கும்போது அல்லது வேறு விதமான சில இன்னல்களில் இருக்கும்போது அந்த ஆசிரியர்கள் இல்லாத நிலையில், பல பள்ளிகளிலே பாடங்கள் நடக்காமல் நின்றுவிடுகின்றன. ஆகவே, இதற்கு நிதி என்பதை ஒரு காரணமாகக் கொள்ளாமல், அடிப்படையாகவே பார்த்து ஆசிரியர்களை நியமிப்பது என்று சொன்னால், 11-ஆவது ஆசிரியரும் அந்த இடத்திற்குத் தேவை என்ற முறையில், நிரந்தரமான விதியை அரசு உருவாக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விதி இருக்கிறது. 10 பிளஸ் 1 போட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால், மாணவர்களின் சராசரி எண்ணிக்கை குறைகிற பொழுது, ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்பொழுது இந்த விதியைப் பயன்படுத்தி, குறைக்காமல் இருக்கிறோமே தவிர, இருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. அந்த அளவுக்கு விதியை நாம் செயல்படுத்தாமல் இருக்கிறோம். ஆனால், புதிய ஆசிரியர்கள் பதவிகளைக் கூடுதலாக, ஏற்படுத்தி வருவதன்மூலமாக, ஓரளவுக்கு அந்தக் குறைப்பாட்டைப் போக்கி வருகிறோம்.

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கரூரில் அமர்வு நீதிமன்றம்.

வினா எண் 438—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமர்வு நீதிமன்றம் (Sessions Court) ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1981 மார்ச் 23]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கரூரிலே தற்சமயம் சப்கோர்ட் இருக்கிறது. கரூர் திருச்சியின் மேற்கு எல்லையில் இருக்கிறது. ஆகவே, கரூர் சப்கோர்ட்டில் அதிகமான கேஸ்கள் இருப்பதால், கேஸ்கள் டிஸ்போசல் ஆகாமல் தேங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா? அடிஷனல் கோர்ட் அமைப்பதாக இருந்தால், மையத்திலே யிருக்கும் குளித்தலையில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரை ஒட்டிய பகுதியிலே அதிகமான வழக்குகள் இருக்கின்றன என்று சொல்லி, குளித்தலையிலே அந்தக் கோர்ட்டை அமைக்க வேண்டும் என்று எந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார் என்று புரியவில்லை. ஆனாலும் உயர் நீதிமன்றம் நடத்திய ஆய்விலே போதிய வழக்குகள் அங்கு இல்லாத காரணத்தால் அங்கே தற்போது துணை நீதிமன்றம் நிறுவத் தேவையில்லை என்று கூறி இருக்கிறது.

திரு. செ. ப. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, கரூரில் அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை இருந்து வருகின்றது. ஆகவே அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து அமைக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, கரூர் துணை நீதிமன்றம் பிறப்பித்த டிக்ரிகளுக்கும், தீர்ப்புகளுக்கும் எதிராக 1977 ஆம் ஆண்டில் 7 சிவில் மேல்முறையீடுகளும், 1978ல் 11 வழக்குகளும், 1979ல் 24 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டதாக உயர்நீதி மன்றத்தில் இருந்து தகவல் வந்திருக்கின்றது. அதைப் போலவே, கரூர் துணை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக திருச்சி செஷன்ஸ் நீதிமன்றத்தில் 1977ல் 14 வழக்குகளும், 1978ல் 11 வழக்குகளும், 1979-ல் 12 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்ட காரணத்தாலும், வழக்குகள் சொற்பமாக இருக்கின்ற காரணத்தாலும் அங்கே கூடுதல் நீதிமன்றம் அமைப்பது உகந்ததாக இராது என்று உயர் நீதிமன்றம் கூறி இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலைக்கும், கரூருக்கும், முசிரிக்கும், துறையூருக்கும் நீதிமன்றம் மையமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சப்-கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்-கோர்ட்டு என்று ஒன்று தற்போது இல்லை. கரூருக்கும், துறையூருக்கும் கூடுதல் நீதிமன்றம் வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் என்று கருதுகிறேன். போதிய வழக்குகள் இல்லாத காரணத்தினால் கரூருக்கே வேண் டாம் என்று உயர் நீதிமன்றம் கூறி இருக்கிறது.

கூட்டுறவு விவசாய சங்கத்தின் மூலம் வண்டி மாடுகள் வாங்க கடன்.

*வினா எண். 439— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள வள்ளிவாகை, சொர குளத்தூர் ஆகிய கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 1978—79ல் வண்டி மாடு கடன் கொடுப்பதாக அங்கத்தி னர்களிடம் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ? எத்தனை அங்கத் தினர்களிடம் வசூலிக்கப்பட்டது ?

(இ) அனைவருக்கும் கடன் கொடுக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 32,793 அளவிற்கு 306 உறுப்பினர்களிட மிருந்து வசூலிக்கப்பட்டது.

(இ) 238 உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வள்ளிவாகை, சொரகுளத்தூர் ஆகிய இரண்டு சங்கங்களில் மட்டுமல்லாது, மாவட்டத்தில் உள்ள பல் வேறு சங்கங்களில், பல்வேறு விவசாயத் தொழிலாளர்கள், ஏழை அரிசனங்கள் உறுப்பினர்களாகி, வண்டி, மாடு பெறுவதற் காக நிறைய பேர்களிடம் பங்கு பணம் வசூலித்து, மிகவும் குறைந்த பேர்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். மற்ற வர்களுக்குக் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத் தப்பட்டவர்களுக்கு கடனாவது தரவேண்டும். அல்லது அவர் களிடம் இருந்து பெற்ற பங்குப் பணத்தையாவது திருப்பித் தர வேண்டும். இதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.